**ஜூலை - 19**

**"பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ" - யோவா 18 : 11**

நமது அன்புள்ள மீட்பருடைய ஊழியத்தின் எல்லா சிறு காரியங்களிலும் தாழ்மையின் குணசீலம் எவ்வளவாகப் பிரகாசிக்கிறது பாருங்கள்! தன்னுடைய எதிரிகளிடத்தில் தன்னை ஒப்புக்கொடுக்கும் நிமிஷத்திலும் தான் தன்னை மனமுவந்து ஒப்புக்கொடுத்ததாக வீம்புப் பேச்சுப் பேசவில்லை. தான் ஒரு தியாகி என்கிற புகழ்ச்சியை அப்போது நாடவுமில்லை. பிதாவினிடம் தனக்கிருக்கும் பக்தி விசுவாசத்தின் சான்றாக இதைத் தன்னிடம் பிதா கேட்டார் என்ற இயல்பான சத்தியத்தை அவர் உரைக்கிறார். அவர் தன்னை தேவனுடைய ஒரு ஊழியக்காரரென்றும், பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்ட ஒரு குமாரனென்றும் ஒத்துக்கொள்கிறார். ஒருவேளை, பாத்திரத்திலே பிதா வார்க்கிறதை முழுமனதுடன் பானம் பண்ணவேண்டும் என்கிற படிப்பினையைவிட அதிகமாக வேறு எந்தப் படிப்பினையும் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களுக்குத் தேவைப்படுகிறதில்லை. அதாவது, அபிஷேகம் பண்ணப்பட்டவரின் சீஷர்களாக இருக்கிற காரணத்தால் நம்முடைய காரியங்களில் பிதா வழிகாட்டி நடத்துகிறார் என்று அங்கீகரிக்கின்ற படிப்பினை. **- Z ’99, 118; 01, 91 (R 2467, 2778)**

பாத்திரம் ஆனந்தத்தையோ அல்லது துக்கத்தையோ கொண்ட அனுபவங்களைத் திருஷ்டாந்தப்படுத்துகிறது. பரிசுத்தவான்களுடைய ஜீவியத்தில் வருகிற எல்லாக் காரியங்களும் தேவனுடைய சித்தத்தின்படி ஏற்படுகிறதினாலும், அதைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் நேரிடுகிறதில்லை என்பதாலும், தங்களுடைய அனுபவங்களை பிதா தங்களுக்குப் பானம் பண்ணுவதற்காகக் கொடுக்கிற பாத்திரம் என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் அதில் எப்பொழுதும் ஒரு திருப்தி அடைந்த மனதோடும் கூடுமானவரை ஒரு நன்றியுள்ள, உயர்வாக மதிக்கின்ற இருதயத்தோடும் தேவனுடைய மகிமைக்கும் மற்றவர்களுடைய லாபத்திற்கும் தங்களுடைய சொந்த லாபத்திற்கும் பானம் பண்ணுகிறதாகவும், தங்களுடைய போதகங்களுக்கு இருந்தது போல, அவர்களுக்கும் அது ஒரு சந்தேகத்திற்கிடமில்லாத விஷயமாக இருக்க வேண்டும். **- P ’34, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யோபு 13:15; சங் 119:75; எரே 10:19; மத் 20:22; 26:39,42; லூக் 22:20; ரோம 5:3-5; 1கொரி 10:16,21; 2கொரி 7:4; பிலி 3:8; சங் 23:5; 116:13; ஏசா 51:22,23.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 84 (R 5421)**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்தவார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சகிக்கப்பட்டன? அவைகள் என்ன பலனில் முடிந்தன?**